# ஏஞ்சியோ பிளாஸ்டி சிகிச்சை செய்து கொண்டவர்களா நீங்கள்?

கோவை, ஆக.17: இருதயத்திற்கு செல்லும் குழாய்களில் ஏற்படும் அடைப்புகளை சரிசெய்ய தற்போது பொதுவாக ஏஞ்சியோ பிளாஸ்டி என்னும் சிகிச்சை செய்யப்படுகிறது. இந்த அறுவை சிகிச்சை மேற்கொண்டவர்கள் தங்கள் அன்றாட செயல்பாடுகளில் மிகுந்த கவனத்துடன் இருக்கவேண்டியது அவசியம் என்கின்றனர் மருத்துவர்கள்.

இது குறித்து கோவை கே.எம்.சி. எச் இருதயம் சார்ந்த நோய்களுக்கான மருத்துவ நிபுணர் சுரேஷ் குமார் கூறியதாவது:

இந்தியாவில் மாரடைப்பு என்பது அதிகரித்து வருகிறது. இதற்கு நமது அன்றாட வாழ்கை நடைமுறைகள், கட்டுப்பாடற்ற உணவு முறை, மன அழுத்தம் உள்ளிட்ட பல்வேறு காரணங்கள் உள்ளன. தற்போது இதற்காக ஏஞ்சியோ பிளாஸ்டி என்ற சிகிச்சை பலர் மேற்கொள்கின்றனர். இச்சிகிச்சை மேற்கொள்பவர்கள் தங்கள் வாழ்கை முறைகளில் சிறு மாற்றங்கள் ஏற்படுத்தவேண்டியது கட்டாயமாகிறது.

ரத்த குழாய்களில் ஏற்படும் அடைப்புகளை நீக்கிவிட்டு ஸ்டன்ட் எனப்படும் மெல்லிய கவசத்தை (மெட்டல் ட்யூப்) ரத்த குழாய்களில் பொருத்துவதே ஏஞ்சியோ பிளாஸ்டி.

ஏஞ்சியோ பிளாஸ்டி சிகிச்சை மேற்கொண்டவர்கள் மருத்துவர்கள் பரிந்துரைப்படி கொடுக்கப்பட்ட மருந்துகளை தொடர்ந்து உட்கொள்ள வேண்டும். மருந்துகள் சார்ந்த ஸ்டன்ட் அணிவதன் மூலம் மீண்டும் அடைப்புகள் வருவதை 98 சதவீதம் தவிர்க்க இயலும். மருந்துகள் சாராத ஸ்டன்ட் பயன்படுத்துவதன் மூலம் 80 சதவீதம் அடைப்புகள் மீண்டும் வராமல் தவிர்க்கலாம்.



டாக்டர் சுரேஷ்குமார்

இத்தகு சிகிச்சைகளை மேற்கொண்டவர்களுக்கு பொதுவாக ஆஸ்பிரின், குளோபிடோகிரில், ஸ்டாடின், மெட்டோபுரோலால் உள்ளிட்ட மருந்துகள் பரிந்துரைக்கப்படுகிறது. இதில் முதல் குறிப்பிட்டுள்ள இரண்டு மருந்துகளை ஒரு வேளை எடுப்பதில் தவிர்த்தாலும் மாரடைப்பு ஏற்படுவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளது. இவர்களுக்கு மறுபடியும் மாரடைப்பு ஏற்பட்டால் 50 சதவீதம் இறந்து விடுவதற்கான அபாயம் உள்ளது.

வருமுன் காப்பது சிறந்தது அதை பலர் கவனிப்பது இல்லை வந்தபிறகாவது கவனம் செலுத்துவது முக்கியம். ஏஞ்சியோ பிளாஸ்டி செய்து கொண்டவர்கள் மருந்துகளை தொடர்ந்து பயன்படுத்தி வந்தால் மேற்கொண்டு பாதிப்புகள் வராமல் தவிக்கலாம். ஏஞ்சியோ பிளாஸ்டி செய்து மறுபடியும் அதிக அடைப்புகள் ஏற்படும் பட்சத்தில் பைபாஸ் அறுவை சிகிச்சை செய்து கொள்ள பரிந்துரைக்கப்படுகின்றனர். சர்க்கரை, உயர் ரத்த அழுத்தம், சிறுநீரக பாதிப்பு உள்ளிட்ட நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு குழாய்களில் அடைப்புகள் ஏற்படும் பட்சத்தில் தாமதிக்காமல் பைபாஸ் அறுவை சிகிச்சை செய்துகொள்வது நல்லது.

மேலும் இவர்கள் உணவு முறையில் மாற்றங்கள் செய்யவேண்டும். கொழுப்பு, எண்ணை சார்ந்த உணவு பொருட்களை தவிர்க்க வேண்டும். அசைவ உணவுகளை குறைத்துக் கொண்டு காய்கறிகள், பழங்கள், கீரைகள் உள்ளிட்ட ஆரோக்கியமான உணவுகளை எடுத்துக்கொள்ள வேண்டும். மேலும் மன அழுத்தம் வராமல் தவிர்க்க தியானம், யோகா, எளிய உடற்பயிற்சி உள்ளிட்டவைகளில் தொடர்ந்து ஈடுபட வேண்டும்.

மாரடைப்பு வராமல் பாதுகாப்பு கருதி ஏஞ்சியோ பிளாஸ்டி செய்துகொள்பவர்கள் இரண்டு நாட்களில் தனது சராசரி வாழ்கைக்கு திரும்பி விடலாம். மாரடைப்பு ஏற்பட்டு பின்பு இந்த சிகிச்சை மேற்கொள்பவர்கள் 5 அல்லது 6 நாட்களில் சராசரி வாழ்கைக்கு திரும்பிவிடலாம் என்று கூறினார்.

கோவை கே.எம்.சி.எச் மருத்துவமனையில் 24 மணி நேரமும் ஏஞ்சியோ பிளாஸ்டி செய்து கொள்ளும் வசதிகளும். நல்ல அனுபவம் வாய்ந்த மருத்துவ நிபுணர்கள் கொண்ட குழுவும் உள்ளது.